## 11.7 மாவட்டத் திட்டப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது மற்றும் செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு

திட்டம் மற்றும் வளர்ச்சி(மா.தி.2) துறை

அரசாணை (நிலை) எண். 204 நாள்: 29.12.1999

படிக்க :

1. அரசாணை(நிலை) எண்.141, திட்டம் மற்றும் வளர்ச்சி( மா.தி.2) துறை, நாள் 18.8.1999
2. உறுப்பினர்–செயலர், மாநிலத் திட்டக்குழு, சென்னை 600 005 அவர்களின் நேர்முகக் கடித எண்.4290 / மாதிகு / 97–14, நாள்27.9.1999

**ஆணை**

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மாவட்டத்தைத் தவிர இதர 28 மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டப் பிரிவுகள் ஏற்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. பார்வை 2–ல் உள்ள நேர்முகக் கடிதத்தில் உறுப்பினர்–செயலர், மாநிலத் திட்டக்குழு அவர்கள் மாவட்டத் திட்டப் பிரிவுகளில் பணியாளர்கள் அக்டோபர், 1999 முதல் பணியாற்றி வருகிறார்கள் என்றும் மாவட்டத் திட்டப்பிரிவின் மாவட்டத் திட்ட அலுவலர்களைத் தவிர ஏனைய பணியாளர்களது சம்பளம், படிகள் மற்றும் இதர செலவினங்களுக்காக 1999–2000 ஆம் ஆண்டில் மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.35.00 கோடியிலிருந்து ரூ.1.00 கோடியை ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட அரசை வேண்டியுள்ளார்.

2. மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்களின் வேண்டுகோளைக் கவனமாக பரிசீலனை செய்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

2.1 புதிதாக 28 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்ட திட்டக் குழுவின் பணியாளர்களின் சம்பளம், படிகள் மற்றும் இதர செலவினங்களை ஏற்கனவே கோரிக்கை எண்.9ல், மாநிலத் திட்டக் குழுவின் பயன்பாட்டில் உள்ள கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம். அதற்காக ரூ.99.00 இலட்சங்கள் (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சங்கள் மட்டும்) கூடுதல் நிதி 1999–2000 ஆம் ஆண்டிற்கு இணைப்பு–1 இல் குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. கூடுதல் நிதி ஒதுக்கீட்டைச் சேர்த்து 1999–2000 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டிற்கான கருத்துருவையும், 2000–2001 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றையும் நிதித் துறைக்கு அனுப்புமாறு மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

"3451–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள்–102.மாவட்டத் திட்டமிடல் அமைப்பு– ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JE– மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல், மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல் (தகவல் தொகுப்பு குறிப்பு எண்.3451–00–102–JE–0006)".

2.2 கோரிக்கை எண்.27ல் மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கென 1999–2000 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.35.00 கோடியில் மாவட்ட திட்டப் பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட ரூ.1.00 கோடியை மட்டும் (ரூபாய் ஒரு கோடி மட்டும்) 1999–2000 ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒப்படைப்பு செய்யுமாறு ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

"2515. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்–101.ஊராட்சி நிறுவனம்– ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – JF – பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்திற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியுதவி–09– உதவி மானியங்கள்(தகவல் தொகுப்பு குறிப்பு எண்.2515–00–101–JF–0903).

2.3 பத்தி 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் ஒதுக்கப்பட்ட கூடுதல் நிதியை 28 மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கும் உடனே பிரித்து வழங்குமாறு மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அவ்வாறு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மாவட்டத் திட்டப் பிரிவின் பணியாளர்களது சம்பளம், படிகள் மற்றும் இதர செலவினங்களைப் "பெற்று வழங்கும் அலுவலர்களாக" மாவட்டத் திட்டப் பிரிவின் மாவட்டத் திட்ட அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

2.4 மாவட்டத் திட்டப் பிரிவுகள் புதிதாக அக்டோபர் 1999 முதல் செயல்பட்டு வருவதால் அவ்வலுவலகங்களுக்கு தமிழ்நாடு கருவூலக் கணக்கு விதிகளின்படி புதிய தமிழ்நாடு கருவூல விதி 70 (TNTC–70) பதிவேடுகள் வழங்குவதுடன், மாவட்ட திட்டப் பிரிவுப் பணியாளர்களின் சம்பளம், படிகள் மற்றும் இதர செலவினங்களுக்காக கருவூலங்களில் மாவட்ட திட்ட அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்டியல்களை , அவைகள் சரியாக இருக்கும் பட்சத்தில் அனுமதிக்குமாறு அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2.5 சென்னை மாவட்டத்தைத் தவிர 28 மாவட்டங்களுக்கும் இணைப்பு–2/இல் குறிப்பிட்டுள்ளபடி மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ரூ.90,000./க்கும் மிகாமல் அலுவலக தளவாட சாமான்களுக்கு நடைமுறைகளிலுள்ள ஆணைகளின்படி ஒப்பளிப்பு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

2.6 இணைப்பு–3 இல் குறிப்பிட்டுள்ளபடி பல்வகை திட்டமிடல் குறித்து பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 உயர்நிலை அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு நகரமைப்பு கல்வி நிலையம் கோயம்புத்தூர், மாநில ஊரக பயிற்சி நிலையம், மறைமலைநகர், காந்தி கிராம ஊரகக் கல்வி நிலையம் காந்திகிராமம், அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிலையம், கோயம்புத்தூர் ஆகியவற்றில் பயிற்சி வழங்கிட அனுமதிக்கப்படுகிறது. அதற்கான செலவினத்தை மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலர் ஒப்பளிப்பு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

2.7 மாவட்ட அளவில் இணைப்பு–4இல் குறிப்பிட்டுள்ளபடி ஊரக / நகர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் 7935 பேருக்கு பல்வகைத் திட்டமிடல் குறித்து மாவட்டத் திட்டப் பிரிவுகள் வழியாக பயிற்சி வழங்கிட அனுமதியளிக்கப்படுகின்றது. அதற்கான செலவினங்களை மாநில திட்டக் குழுவின் உறுப்பினர்–செயலர் ஒப்பளிப்பு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

2.8 மாவட்ட வளர்ச்சித் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள், ஊராட்சி வளர்ச்சித் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள், நகர / பேரூராட்சி வளர்ச்சித் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் மாவட்ட திட்டமிடுதல் பயிற்சி பற்றிய கையேடுகள் மற்றும் இதர கையேடுகள் ஆகியவற்றைத் தயாரித்து மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கும் வழங்கிடவும் அதற்கான செலவினத்தை ஒப்பளிப்பு செய்திடவும் மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலருக்கு அனுமதியளிக்கப்படுகின்றது.

2.9 நிர்வாக வசதியைக் கருதி மாவட்டத் திட்டப் பிரிவுகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக வளாகங்களில் செயல்பட அனுமதியளிக்கப்படுகிறது. இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனே தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. இவ்வரசு ஆணைகள் ஊரக வளர்ச்சித் துறையின் அ.சா.எண்.44984/ தி2 / 99–1 , நாள்18.11.99 மற்றும் நிதித் துறையின் அ.சா.எண்.88871/ பொது / 99–1, நாள்4.12.1999ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஆர். சந்தானம்**
அரசு செயலர்

**11. DDP**

**இணைப்பு–1**

**கோரிக்கை எண்.9**

கணக்குத் தலைப்பு:

"**3451**–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள்–**102.**மாவட்டத் திட்டமிடல் அமைப்பு– ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JE– மாநிலத் திட்டக் குழுவை வலுப்படுத்துதல்,மாவட்ட அளவிலான திட்ட அமைப்பை ஏற்படுத்துதல்(தகவல் தொகுப்பு குறிப்பு எண்.**3451–00–102–துநு–0006**)".

(ரூபாய் ஆயிரத்தில்)

| விரிவான கணக்குத் தலைப்பு | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 1999–2000 | கூடுதல் நிதி ஒதுக்கீடு | மொத்தம் | தகவல் தொகுப்புக் குறியீடு |
|---|---|---|---|---|
| 01. சம்பளங்கள் | | | | 3451 00 102 JE 0104 |
| 01. அடிப்படை சம்பளம் | 1 | 2118 | 2119 | 3451 00 102 JE 0113 |
| 02. மருத்துவப்படி | 1 | 21 | 22 | 3451 00 102 JE 0122 |
| 03. மருத்துவச் செலவுகள் | 1 | –– | 1 | 3451 00 102 JE 0131 |
| 04. ஏனைய படிகள் | 1 | –– | 1 | 3451 00 102 JE 0140 |
| 05. இடைக்கால நிவாரணம் | 1 | –– | 1 | 3451 00 102 JE 0159 |
| 06. வீட்டு வாடகைப்படி | 1 | 146 | 147 | 3451 00 102 JE 0168 |
| 07. பயணச் சலுகை | 1 | –– | 1 | 3451 00 102 JE 0177 |
| 08. நகர ஈட்டுப்படி | 1 | 46 | 47 | 3451 00 102 JE 0186 |
| 03. அகவிலைப்படி | 1 | 789 | 790 | 3451 00 102 JE 0300 |
| 04. பயணச் செலவுகள் | | | | 3451 00 102 JE 0408 |
| 01. சுற்றுச் பயணப்படிகள் | 1 | 200 | 201 | 3451 00 102 JE 0417 |
| 02. பணியிட மாற்றப் பயணப்படிகள் | 1 | 80 | 81 | 3451 00 102 JE 0426 |
| 05. அலுவலக செலவுகள் | | | | 3451 00 102 JE 0506 |
| 01. தொலைபேசிக் கட்டணங்கள் | 1 | – | 1 | 3451 00 102 JE 0515 |
| 02. ஏனைய சில்லறைச் செலவுகள் | 1 | 1120 | 1121 | 3451 00 102 JE 0524 |
| 19. இயந்திரமும் சாதனமும் | | | | 3451 00 102 JE 1907 |
| 01. வாங்குதல் | 1 | 1400 | 1404 | 3451 00 102 JE 1916 |
| 02. புதுப்பித்தலும் மாற்றியமைத்தலும் | 1 | – | 1 | 3451 00 102 JE 1925 |
| 03. பராமரிப்பு | – | – | – | 3451 00 102 JE 1934 |
| 2.1. இயக்கூர்திகள் | | | | 3451 00 102 JE 2102 |
| 01. வாங்குதல் | 1 | – | 1 | 3451 00 102 JE |

| | | | | |
|---|---|---|---|---|
| **45.** பெட்ரோலியம், எண்ணெய், மசகெண்ணெய் | **1** | **–** | **1** | **3451 00 102 JE** 4502 |
| **49.** பண்டிகை முன்பணம் | **1** | **–** | **1** | **3451 00 102 JE** 4904 |
| **60.** அரசு சார்பற்ற உறுப்பினர்களுக்குப் பயணப்படி/ நாட்படி | **1** | **–** | **1** | **3451 00 102 JE** 6000 |
| **71.** அச்சிடும் செலவுகள் | **–** | **680** | **680** | **3451 00 102 JE** 7107 |
| **72.** பயிற்சி | **1** | **3300** | **3301** | **3451 00 102 JE** 7205 |
| **77.** கழிக்கவும்– திருப்பி வசூலிப்பரை | **–1** | **–** | **–1** | **3451 00 102 JE** 7705 |
| **மொத்தம் JE (2202)** | **21** | **9900** | **9921** | |

**இணைப்பு–2**

மாவட்டத் திட்டப் பிரிவுகளுக்கான
அலுவலகத் தளவாடங்கள் மற்றும் அதன் எண்ணிக்கை

| வரிசை எண் | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அலுவலருக்கான மேஜை | 1 |
| 2 | அலுவலருக்கான நாற்காலி | 1 |
| 3 | சாதாரண மேஜை | 2 |
| 4 | "S" வகை நாற்காலி | 5 |
| 5 | பீரோ(6) | 2 |
| 6 | பீரோ(4) | 1 |
| 7 | ஸ்டூல் | 2 |
| 8 | கோப்பு மர அறைகள் / ஸ்டாண்ட் | 5 |
| 9 | பிரிண்டருடன் கூடிய கணிணி | 1 |
| மொத்தம் | | 20 |

**ஆர். சந்தானம்**
அரசு செயலாளர்